
## திராவிடத்தால் வாழ்கிறோம்

834

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

திரைக்கதை வசனம்

## கலைஞர் மு.கருணாநிதி

குமரன்தாஸ்

10

# புதுமைப்பித்தன்: அநீதியை வீழ்த்தி, நீதியை நிலைநாட்டிய வீரன்!





படங்கள் உதவி : ஞானம்

**திரையுலகில் மாபெரும் புரட்சி செய்த கலைஞரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகளின் பன்முகப் பரிமாணங்களை விளக்கும் தொடர்.**

1957-ஆம் ஆண்டு, கலைஞர் கதை, திரைக்கதை வசனம் எழுதி திரைக்கு வந்த படம் 'புதுமைப்பித்தன்'. இப்படத்திற்கு கதை வசனத்தை கலைஞர் எழுதியபோது, தி.மு.க.வின் சட்டமன்ற உறுப்பினராக இருந்தார். காங்கிரஸ் அரசை எதிர்த்து மிகத்தீவிரமாக, அவர் களமாடிக்கொண்டிருந்த நேரம். அன்றைய தமிழ்ச் சமூக, அரசியல் சூழலின் தாக்கம், திரைப்பட வசனத்தில் அழுத்தமாக வெளிப்பட்ட படங்களில் ஒன்று 'புதுமைப்பித்தன்'.

டி.ராமண்ணா இயக்கி, முனிரத்னம் தயாரிப்பில் எம்.ஜி.ஆர்., டி.எஸ்.பாலையா, டி.ஆர்.ராஜகுமாரி, பி.எஸ்.சரோஜா, ஈ.வி.சரோஜா, சந்திரபாபு போன்ற முன்னணி நடிகர்கள் நடித்து, திரைக்கு வந்த படம். சிறந்த வசனம், பாடல்கள், காட்சியமைப்புகளைக் கொண்ட படம். பாடல்கள் தஞ்சை ராமையாதாஸ். இசை ஜி.ராமநாதன்.

மன்னராட்சிக் காலத்தில் நிலவிய பதவி வெறியையும், பங்காளிச் சண்டையையும், மன்னர்களின் மக்கள் விரோத ஆட்சியையும் எதிர்த்துப் போராடி, வெற்றி பெறும் மக்கள் தலைவனின் கதையாக புதுமைப்பித்தனைப் படைத்திருப்பார் கலைஞர். அன்றைய காலகட்ட அரசியலுடன் பொருத்திப் பார்த்தால், இந்தக் கதைக்குள் கலைஞர் பேசிய மக்களாட்சி அரசியலைப் புரிந்து கொள்ள முடியும்.

### நாடக மேடைகளும் கழகமும்

பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞரும், கழக முன்னோடிகளும் தங்கள் நாடகங்களின் மூலம் மக்கள் மத்தியில் புரட்சிகரமான சிந்தனைகளை விதைத்துக் கொண்டிருந்த காலத்தில், நாடகக் குழுவினர் செய்துகொண்டிருக்கும் மக்கள் பணியினைப் போற்றும் வகையில், உரையாடல்களை எழுதியிருப்பார் கலைஞர்.

அண்ணனிடமிருந்து நயவஞ்சகமாக நாட்டைக் கைப்பற்றி, கொடுங்கோல் ஆட்சி புரியும் பிரதாபசிம்மன், மக்கள் தலைவனைக் காப்பாற்றும் நாடகக்குழுவைப் பார்த்து, “நாடக மேடை மூலமாக நாட்டைக் கவிழ்க்க நீங்கள் எத்தனை பேர் புறப்பட்டிருக்கிறீர்கள்?” என்று எழுப்பும் கேள்வி, உண்மையில் அன்றைய ஆளும் கட்சியினரின் கேள்விதான் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

### திரைப்படத்தின் கதை



வெளிநாடு சென்றுவிட்டு திரும்பும் மணிபுரி நாட்டின் இளவரசன் ஜீவகனை (எம்.ஜி.ஆர்.) வரவேற்கிறார், அவரது சித்தப்பா பிரதாபசிம்மன் (டி.எஸ்.பாலையா). சித்தப்பாவும், மக்களும் சோகமாக இருக்கிறார்கள். அதுகுறித்து விசாரிக்கையில், வேட்டைக்குப் போன மன்னரை (பந்துலு) வேங்கை அடித்துக் கொன்று விட்டதாக கூறுகிறார் சித்தப்பா. அதை உண்மை என நம்பி, மன்னரின் நினைவிடத்திற்கு அஞ்சலி செலுத்தச் செல்லும் ஜீவகனிடம், ஒரு படைவீரன் ரகசியமாக ஒரு கடிதத்தை அளித்துச் செல்கிறான்.

அதில் 'மன்னர் இறக்கவில்லை மறைக்கப் பட்டிருக்கிறார்' என்று எழுதியிருக்கிறது. உடனே ஜீவகன் தனது நண்பன் மூலம், அந்த வீரன் யாரென துப்பறிய அனுப்புகிறான். அரண்மனை வைத்தியர் துர்முகியின் (ஆர்.பாலசுப்ரமணியன்) மகள் வேல்விழிதான் மாறுவேடத்தில் கடிதம் கொடுத்துச் சென்றது என அறிந்து, உண்மை என்ன எனக் கேட்கிறான். ஜீவகனின் சித்தப்பா பிரதாபனும் சேனாதிபதி பராக்கிரமனும் இணைந்து மன்னரைக் கைதுசெய்து மறைத்து வைத்து, ஆட்சியைக் கைப்பற்றச் சதி செய்து வருவதாக அவள் சொல்கிறாள். இருவருக்குமிடையே காதல் பிறக்கிறது.

பிரதாபன் தனது அண்ணனான மன்னனை எல்லைக் கோட்டையில் உள்ள ரகசிய சிறையில் அடைத்து வைத்து, நாட்டை ஆளும் உரிமை தனக்கும் தனது சந்ததிக்கும் மட்டும்தான் சொந்தம் எனச் சாசனத்தில் எழுதிக் கையெழுத்திட்டுத் தருமாறு கேட்டு, சித்தரவதை செய்கிறான். ஜீவகனைக் கொன்று ஆட்சியைக் கைப்பற்றினால் மக்கள் எதிர்ப்பார்கள் என்பதால், ஜீவகனுக்குப் பைத்தியம் பிடிக்கும்படி செய்துவிடலாம் என அரண்மனை வைத்தியர் துர்முகி கூறும் ஆலோசனையைக் கேட்டு பிரதாபன் வைத்தியரிடம் மருந்து தயாரிக்கச் சொல்கிறான்.

வைத்தியர் துர்முகி ஜீவகனுக்காகத் தயாரித்து வைத்திருந்த விசத்தை அவர் மகள் வேல்விழி கீழே கொட்டி விட்டு, மாற்று மருந்தைக் குப்பியில் நிரப்பி வைத்து விடுகிறாள். அதனை நடனமங்கை அபராஜிதா (ஈ.வி.சரோஜா) மூலமாக ஜீவகனுக்குக் கொடுக்கின்றனர். அதனைக் குடித்துவிட்டு, ஜீவகன் பகலில் பித்தனாகவும் இரவில் முகமூடி அணிந்து, புதுமைப் பித்தனாகவும் நடித்துத் தனது தந்தை இருக்கும் இடத்தைக் கண்டுபிடிக்கப் பாடுபடுகிறான்.

இதற்கிடையே மணிபுரிக்கு வரும் நாடகக்குழுவைச் சேர்ந்த இன்பவள்ளிக்கும் (டி.ஆர்.ராஜகுமாரி) ஜீவகனுக்கும் நட்பு ஏற்படுகிறது. ஒருமுறை புதுமைப்பித்தனைத் தேடிவரும் சேனாதிபதியிடமிருந்து அவனை நாடக மேடையில் மறைத்து வைத்துக் காப்பாற்றுகிறாள் இன்பவள்ளி.

இதனால் கோபமடையும் சேனாதிபதி, அவர்களை அரண்மனைக்கு இழுத்து வந்து மிரட்டி, புதுமைப்பித்தனைப் பிடித்துக் கொடுக்க வேண்டும் எனக் கட்டளை இடுவதுடன், சித்தரவதையும் செய்கிறான்.

பலகட்ட போராட்டங்களுக்குப் பின்னர், மக்கள் ஆதரவுடன் தந்தையை மீட்கிறான், புதுமைப்பித்தன். இறுதியில், வேல்விழியும் ஜீவகனும் ஒன்று சேர்வதுடன் படம் நிறைவடைகிறது. பித்தன், புதுமைப்பித்தன் என இரண்டு பகலிரவு வாழ்க்கையில், வாழும் ஜீவகன் மூலம் பல புரட்சிகரமாக வசனங்களைப் பேசுவார் கலைஞர்.

> **தமிழ்ச் சமூக, அரசியல் சூழலின் தாக்கம், திரைப்பட வசனத்தில் அழுத்தமாக வெளிப்பட்ட படங்களில் ஒன்று 'புதுமைப்பித்தன்'.**

### அதிர்வலை வசனங்கள்

**பிரதாபன்:** அகப்பட்டுக் கொண்டான் அதிசய மனிதன். மணிபுரி சாம்ராஜ்யத்தில் யாருக்குமே புலப்படாமல் இருந்த மர்மம் இன்று வெளிப்பட்டுவிட்டது. கோட்டையிலே பிறந்தும் கொள்ளைக்காரனாக வாழ வேண்டும் என்று இவன் தலையில் எழுதியிருக்கிறது.

**ஜீவகன்:** யார் கொள்ளைக்காரன்? உலகம் விழித்துக் கொண்டிருக்கும் போதே எங்கள் நாட்டைக் கைப்பற்ற சூழ்ச்சி செய்யும் நீர் அல்லவா கொள்ளைக்காரன்? வேங்கை பாய்ந்தது, வேந்தர் மறைந்தார் என்று வேதனைப் புராணம் படித்துவிட்டு வேலும் வாளும் இல்லாமல், வீரர்கள் உதவியில்லாமல் விழியிலே வழியும் வஞ்சனையை மட்டும் துணையாகக் கொண்டு எங்கள் தேசத்தையே விழுங்கத் திட்டமிடும் தீயவனாம் நீரல்லவா கொள்ளைக்காரன்? என கலைஞர் எழுதிய உரையாடல் அன்றைக்குப் பல அதிர்வுகளை உருவாக்கியது.

பிரதாபசிம்மன், சேனாதிபதி பராக்கிரமன், அரண்மனை வைத்தியர் துர்முகி, வீரையா, இன்பவள்ளி ஆகியோரின் அளவுகடந்த சுயநல வெறியாலும், துரோகத்தாலும் நிகழும் சம்பவங்களே இப்படத்தின் கதையாக அமைகின்றன.

பதவி ஆசை கொண்டு, சுகபோக வாழ்க்கை வாழும் பிரதாப சிம்மனுடைய ஆட்சியில், சேனாதிபதி பராக்கிரமனுடைய அதிகாரத்தின் கீழ், மக்கள் அவதிப்படுகின்றனர்.

எதிர்த்துப் பேசுவோர் நாக்கு அறுக்கப்படுகிறது. தங்களின் குறைகளை எடுத்துச் சொல்வோர் கால்கள், வெட்டப்பட்டு, முடமாக்கப் படுகின்றனர். ஆக, புதுமைப்பித்தன் தனது தந்தையை மீட்பது மட்டுமின்றி, பிரதாப சிம்மனின் அக்கிரம ஆட்சியில் இருந்து தனது நாட்டு மக்களைக் காக்கவும் போராடுகிறான்.

பிரதாபனின் பதவி ஆசை, அதனால் அவன் தனது அண்ணனுக்குச் செய்யும் துரோகம் அத்துரோகத்திற்குத் துணைபோகும் பராக்கிரமன், துர்முகி, வீரையா, இன்பவள்ளி ஆகிய அனைவருமே இறுதியில் அழிகின்றனர். அறம் வெற்றி பெற்று நீதியும் நேர்மையும் நிலைநாட்டப்படுகிறது.

**...காட்சி விரியும்**


## பொய்க்கு மட்டும் பச்சைக் கொடியா?

பகல்ஹாமில் நடத்தப்பட்ட தீவிரவாதத் தாக்குதல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது என ஒட்டுமொத்த நாடும் பயங்கரவாதத்தை எதிர்க்கிறது. தீவிரவாதிகள் மீது, இந்திய ராணுவம் நிகழ்த்திய பதிலடித் தாக்குதலையும் இந்தியா கூட்டணித் தலைவர்கள் மனதாரப் பாராட்டியுள்ளனர். ஆனால், பதற்றமான சூழலில், பெரும்பாலான ஊடகங்களின் செயல்பாடு அதிருப்தி தரக்கூடியதாகவும், பொறுப்பில்லாத தன்மையை வெளிக்காட்டுவதாகவும் இருந்தது.


பயங்கரவாத முகாம்களைக் குறிவைத்து, அழித்ததாக மட்டுமே இந்திய ராணுவம் தெரிவித்துள்ளது. ஆனால், பாகிஸ்தானின் வான் பாதுகாப்புக் கவசத்தை இந்திய ராணுவம் அழித்துவிட்டதாகவும், லாகூர், பெஷாவரை உருக்குலைத்து விட்டதாகவும், பாகிஸ்தான் பிரதமர் வீட்டின் அருகே குண்டுவீசி விட்டதாகவும், பாகிஸ்தான் போர் விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும், நீலம்–ஜீலம் திட்டத்திற்கு அருகிலுள்ள அணை மீது இந்தியா தாக்குதல் நடத்தியதாகவும் பல்வேறு பொய்ச் செய்திகளை, புனைவுகளை ஊடகங்கள் கட்டவிழ்த்து விட்டு, நாட்டு மக்களிடையே வீண் பதற்றத்தைத் தூண்டியுள்ளன.

அத்தகைய பொறுப்பற்ற செயல்களைச் செய்த எந்த ஊடகத்தின் மீதும் ஒன்றிய அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால், ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு எதிராகத் துணிச்சலாக மாற்றுக் கருத்துக்களை வைக்கும் 'தி வயர்' ஊடகம் காரணம் தெரிவிக்காமல் முடக்கப்பட்டுள்ளது. இந்திய அரசியலமைப்பு வழங்கியிருக்கும் பத்திரிகைச் சுதந்திரத்திற்குச் சவால் விடும் மோசமான போக்கு இது. ஏற்கெனவே பா.ஜ.க. ஆட்சியில் பத்திரிகைச் சுதந்திரக் குறியீட்டில் இந்தியா மிக மோசமாகப் பின் தங்கி வருகிறது, கருத்துரிமைகள் பறிப்பு, சர்வ சாதாரணமாகி வருகிறது. இந்த நிலையில், 'தி வயர்' ஊடக இணையதளம் முழுமையாக நீக்கப்பட்டிருப்பது கண்டனத்திற்குரியது.

## ஃப்ளாஷ்பேக்



### கழகமே குடும்பம்...



வழக்கறிஞர் சினேகா தேவி

2011 -ஆம் ஆண்டு, மே மாதம் 10 -ஆம் தேதி, அன்றைய கழக இளைஞர் அணிச் செயலாளர் – இன்றைய கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை என்னுடைய பிறந்தநாளை முன்னிட்டு, சந்திக்கும் வாய்ப்பைப் பெற்றேன். எனது தாத்தா மீனாட்சிசுந்தரம் அவர்கள் நெருக்கடி காலத்தில் 'மிசா' கைதியாகச் சிறை சென்றவர். என்னுடைய தந்தை வே.விஜயகுமார் அவர்கள் நகர மாணவர் அணி முன்னாள் அமைப்பாளராகப் பொறுப்பு வகித்து, தற்போது வட்டக் கழகச் செயலாளராகக் கழகப் பணியாற்றி வருகிறார். குடும்பத்தோடு தலைவர் தளபதி அவர்களைச் சந்தித்தது என் வாழ்வில் மறக்க முடியாத ஒன்று.

**– வழக்கறிஞர் சினேகா தேவி,**
**புதுக்கோட்டை மாநகரம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

**கருவூலம்**

## நீதிக்கட்சி ஆட்சி!

சென்னை மாகாணத்தை 'நீதிக்கட்சி' 16 ஆண்டுகள் ஆட்சி செய்தது. ஆனால், அது இரட்டை ஆட்சிக் காலம். முழு அதிகாரமோ, முக்கிய அதிகாரங்களோ, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைச்சர்களிடம் ஒப்படைக்கப்படாத காலம், அந்தப் பொறுப்புகள் வெள்ளையரிடமே இருந்தன. இன்று டெல்லிக்கும், மாநிலங்களுக்கும் உள்ள நிலைபோல இருந்தாலும், உள்ள அதிகாரத்தைச் சிறப்பாகப் பயன்படுத்தி, அந்தக் காலத்திலேயே இந்தியாவிற்கு எடுத்துக்காட்டாக விளங்கியது நீதிக்கட்சி ஆட்சி.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131